Kerala Gazette No. 33 dated 18th August, 2020.

**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-பி) துறை

அறிக்கை

எண் 22971/ச. இ. பி. 1/2017/சட்டம்.

2018 ஏப்ரல் 7
திருவனந்தபுரம், 1193 மீனம் 24
1940 சைத்ரம் 17.

2018 ஏப்ரல் மாதம் 7-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 28

## 2018-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவனங்கள் (திருத்த) அவசரச்சட்டம்

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

1950-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவனங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்குரிய ஒரு அவசரச்சட்டம்.

முன்னுரை.—2017-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவனங்கள் (திருத்த) அவசரச்சட்டம் (2017-ன் 23) நவம்பர் 14-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பரம் செய்யப்பட்டதாலும்;

2018, ஜனவரி 22-ம் தேதி தொடங்கி 2018 பிப்ரவரி 7-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையின் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவை தாக்கல் செய்யவும் நிறைவேற்றவும் முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநிறுத்துவதற்காக 2018-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவனங்கள் (திருத்த) அவசரச்சட்டம் (2018-ன் 10) 2018 பிப்ரவரி 12-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

2018, பிப்ரவரி 26-ம் தேதி தொடங்கி 2018 ஏப்ரல் 4-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதாவை தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பு சட்டம் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ன் துணை உட்பிரிவு (எ)-ன் அடிப்படையில் மேற்கூறிய அவசரச்சட்டம் 2018 ஏப்ரல் 9-ம் தேதி அமலில் இருந்து நின்று விடுவதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது உள்ளது என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவனங்கள் (திருத்த) அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2017 நவம்பர் 14-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. 1950-ன் XV-வது சட்டம் தற்காலிகமாக திருத்தம் செய்யப்படல்.—இந்த அவசரச்சட்டம் அமலில் இருக்கும் காலத்தில் 1950-ன் திருவிதாங்கூர்-கொச்சி இந்து சமய நிறுவன சட்டத்தில் (1950-ன் XV-வது சட்டம்) (இதற்கு பிறகு முதன்மை சட்டம் என்று குறிப்பிடப்படும்), பிரிவு 3 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. பிரிவு 10-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 10-ல் துணைப்பிரிவு (1)-ல், "மூன்று வருடங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டு வருடங்கள்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. பிரிவு 12-க்கு பதிலாக புதிய பிரிவு சேர்த்தல்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 12-க்கு பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது,-

“12. குடியரசுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான மதிப்பூதியம்.—தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஒரு மாதத்திற்கு அரசு காலத்திற்கேற்றாற்போல் நிச்சயித்து அரசு அரசிதழ் அறிக்கையில் அறிவித்து விளம்பரப்படுத்தியுள்ள படியான மதிப்பூதியம் மற்றும் அமர்வு கட்டணம் பெறுவதற்கான உரிமையுடையவர்களாவர்”

5. பிரிவு 71-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 71-ன் துணைப்பிரிவு (2)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது,-

“(2) காலா காலத்திற்கு ஏற்றாற்போல் அரசு நிச்சயித்து அரசு அரசிதழ் அறிக்கையில் வெளியிடப்படும் மதிப்பூதியம் மற்றும் இருப்புக் கட்டணம் பெறுவதற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உரிமையுடையவர்களாவர்”.

6. இரத்தாதலும் காப்பும்.—(1) 2018-ன் திருவிதாங்கூர் கொச்சி இந்து சமய நிறுவனங்கள் அவசரச்சட்டம் (2018-ன் 10) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச்சட்டத்தின்கீழ் செய்ததோ அல்லது செய்ததாக கருதப்படுவதோஆன ஏதேனும் காரியம் அல்லது எடுத்ததோ எடுத்ததாக கருதப்படுவதோஆன ஏதேனும் நடவடிக்கை, இந்த அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின்கீழ் செய்ததாகவோ, எடுத்ததாகவோ கருதப்படவேண்டியதாகும்.

பி. சதாசிவம்,
ஆளுநர்.